முருகப்பெருமான் துணை

**மகான் காகபுஜண்டர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.10.2022**, வியாழக்கிழமை

1. அவதார ஞான தேசிகனே
ஆறுமுகப் பெருமான் சக்தியாக
அவதாரம் எடுத்த அரங்கமகானே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது துலை திங்கள்
குறையிலா சூலதிகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 03 ம் நாள் 20.10.2022, வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசிதனை
தேசிகனுக்கு காகபுஜண்டர் யானும்
3. யானும் உலகோர் நலமுற உரைப்பேன்
உயிர்கொலை நீக்கி உலகமக்கள்
ஞானம்பயில வேண்டி இனிதே
ஞான சபை படைத்து நன்கு
4. படைத்துமே சன்மார்க்க விதையை
பாருலகம் எங்கிலும் விதைத்து
தடையற அறுவடை செய்யும்
தவசி அரங்கரின் சேவைதனை
5. சேவைதனை நம்பி வந்துமே
சேவகர்களாக மக்களெல்லாம்
அவனியில் அரங்கன் தொண்டில்
அனுகூலம் பெற்றுவருகவே
6. வருகவே எல்லா மக்களுக்கும்
வரமாக அரங்கன் தயவு
தருமமாக தீட்சை பலமாக
தரணியில் இறங்கி பாதுகாப்பு
7. காப்புடன் ஞானவான் ஆகின்ற
கடைத்தேற்றம் உறுதி தந்து
ஒப்புகொண்டு தொடர்ந்து வர
ஓங்காரம் பாடி வருதலுற
8. வருகவே வையகம் எங்கிலும்
வளர்ச்சி முகமாக மாற்றம்
பெருமைதரும் துறைகள் ஆக
பேருலகில் நீதி நிர்வாகம் யாவும்
9. யாவுமே சமநிலை பெற்று
எங்கும் ஊழல் அபகரிப்பு இல்லா
அவனியில் அமைதி மேன்மை
அனைவரின் உரிமையை போற்றிடும்

10. போற்றிடும் காத்திடும் வண்ணம்
புஜண்டன் என் அருட்தயவும்
ஆற்றல்மிக்க அரங்கனுடன் கலந்து
அனுகூலம் உலகோர்க்கு கிட்டும்

11. கிட்டவே தருமமே வெல்லும்
கேட்காமலே அரங்கன் ஆசி
தட்டாமல் யாவர்க்கும் எட்டி
தரணியில் ஞான ஆட்சி மலரும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–